**தலைப்பு 10 – இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும். இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துக்களும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 14 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 13 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, இந்நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவிடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமத்தின் கீழ் எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,

வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் .

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

**ஆதனப் பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனப் பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கிடும் போது கீழுள்ள குறைபாடுகள் வெளியாகின.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றில் ஆரம்ப மிகுதியின் கீழ் சீராக்கப்பட வேண்டிய ரூபா 3,118,800 வருட கொள்வனவாக காட்டப்பட்டிருந்தது. | CIGAS திட்டத்தின் கீழ் நிதி சாரா சொத்துக்கள் இற்றைப்படுத்தும் போது 010-1-1-0-2509 செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிரந்தர சொத்துக்களின் கொள்வனவு | நிதிசாரா சொத்துக் களுக்கான கூற்றில் ஆரம்ப மிகுதிகளின் கீழ் சீராக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆரம்ப மிகுதியாக சேர்த்துக் கொள்ளப்படுவதாயினும் அவைகளும் இவ்வருடத்திற்கான கொள்வனவாதலால் அப் பெறுமதியினையும் நிதிக் கூற்றுக்களில் நிதி சாரா சொத்துக்களுக்கான கூற்றில் (ACA-6) கொள்வனவுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் சொத்துக்களின் கொள்வனவு ரூபா 9,098,376 ஆன போதிலும் நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றில் அது ரூபா 9,083,576 ஆக காட்டப்பட்டிருந்தது. | CIGAS வேலைத்திட்டத்தில் உட்படுத்துகையில் இந்த ரூபா 14,800 ஆன பணத்தொகை 010-1-1-0-2102 செலவின விடயத்தின் கீழ் சரியாக கணக்கிடப்பட்டிருந்த போதிலும் விசேட குறிப்பினை தயாரிக்கும் போது அதனை ஆரம்ப மிகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டின் சொத்துக் கொள்வனவினை பிழையின்றி உட்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் ஆணைக்குழு கட்டத்தைச் சுற்றி மதிலொன்றை கட்டுவித்தல் மற்றும் பெயர்ப் பலகை ஒன்றினை பொருத்துவதற்கு செலவிடப்பட்ட ரூபா 14,452,025 மூலதனமாக்கப் படவில்லை. | 2021 வருடம் ஆரம்ப மிகுதியாக உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டடம் மற்றும் நிர்மாணத்தின் கீழ் மூலதனமாக்கப் பட வேண்டும். |
| (ஈ) | 2016 ஆம் வருடம் மலசலகூட முறைமையினை நவீனமயப்படுத்தல் மற்றும் பதிவேடகத்தில் மர தட்டுக்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 5,345,179 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அதனை ரூபா 3,713,388 குறைவாக ரூபா 1,631,791 மாத்திரம் மூலதனமாக்கப் பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டு அதனை ஆரம்ப மிகுதியாக உட்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | செலவிடப்பட்ட முழு பெறுமதி யினையும் மூலதனமாக்கப் படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) மீளாய்வாண்டில் மூலதன மயப்படுத்தப்பட்ட 14 நீள் குத்தகை வாகனங்களை சபையிடம் கையேற்கப்படவில்லை. | குத்தகை கால எல்லை முடிவடைந்துள்ளது. இவ்வாகனங்களை மூலதனமயமாக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் இவற்றை கையேற்பது தொடர்பாக எமக்கு எவ்வித தாமதமும் இல்லாததுடன் ஏற்கனவே கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உரிமையினை கையேற்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் சொத்துக்களை கணக்கிடப்பட வேண்டும். |
| (ஊ) 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் மூலதன மயப்படுத்தப் பட்டிருந்த 22 வாகனங்களின் கிரயத்தினை மூலதன மயமாக்கப்படுவதற்கு பதிலாக காப்புறுதி செய்வதற்கு நிச்சயித்திருந்த பெறுமதியினை மூலதன மயமாக்கப்பட்டிருந்தது. | 22 வாகனங்களையும் அவற்றின் கிரயப் பெறுமதிக்கே காப்புறுதி செய்யப்பட்டிருந்தபடியால் அப்பெறுமதியையே மூலதனமாக்கப்பட்டது. | கிரயத்தினை மூலதன மயப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 திகதிக்கு உள்ளவாறான நிதி கூற்றின் விசேட குறிப்பு 02 இன் பிரகாரம் இறுதிப் பணம் மிகுதி ரூபா 45,000 ஆக இருப்பினும், காசுப்பாய்ச்சல் கூற்றில் மிகுதிப் பணத்தினை காட்டப்பட்டிருக்கவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்றில் பணத்தின் தேறிய மாற்றத்தினை மாத்திரம் கவனத்தில் கொண்டு வருட இறுதி உபகட்டுநிதி மிகுதி விசேட குறிப்பினை 2 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. | பிழையின்றி குறித்து வைக்கப்பட வேண்டியவை. |

### 1.6.3 அரச அதிகாரிகளின் முற்பண கணக்கிற்கான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| திறைசேரி அச்சுக் குறிப்புக்களின் படி 2020 திசெம்பர் 31 ஆந் திகதி | இது 2021 வருடம் முதல் தயாரிக்கப்படும் அரச | வருடாந்த இணக்கக் |

| | | |
|---|---|---|
| உள்ளவாறான வருட இறுதி செலுத்தல்கள் மற்றும் பெறுவனவுகள் முறையே ரூபா 12,274,732 மற்றும் ரூபா 7,432,579 ஆக இருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 506(ஈ) இன் பிரகாரம் அரச அதிகாரிகளின் முற்பண B கணக்கில் அம் மிகுதிகள் முறையே ரூபா 12,035,375 மற்றும் ரூபா 7,193,221 ஆக காட்டடப்பட்டிருந்தன. | அதிகாரிகளின் முற்பண பீ கணக்கில் வருடாந்த இணக்கக் கூற்றில் இடப்படும். | கூற்றில் வருட இறுதி செலவினம் மற்றும் பெறுவனவின் உண்மையான மதிப்பீட்டினை திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளில் உள்ளவாறு காட்டப்பட வேண்டும். |

### 1.6.4 வாணிபமல்லா முற்பணக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 2,597,130 க்கான சுற்றிவளைப்பு முற்பணம் தொடர்பான வழக்கு தீர்ப்புக்கள் வெளியிடப்பட்டிருந்த போதிலும், 2021 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் அம்மிகுதிகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 2,597,130 க்கான சுற்றிவளைப்பு முற்பணம பணம் தொடர்பான வழக்குக் கோவைகளை நிறுத்தி வைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | இலஞ்சமாக பயன் படுத்துவதற்கு பெற்றுக் கொடுக்கப்படும் முற்பணத்தினை வழக்குப் பொறுப்பான அதிகாரியிடம் அவ் வழக்குகள் முடிவுற்று வழக்குத் தீர்ப்புக்கள் வெளியாகும் வரை வைக்கப்பட்டு பின்னர் சிராபரிடம் சிக்கலறுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புக்களில் அவதானிக்கப்பட்ட சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கா சந்தர்ப்பங்கள் ஒப்பீடு செய்யப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | | |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371(2) பந்தி | அலுவல் நிறைவேற்றப் பட்டவுடன் அவ்வலுவலுக்கான உப கட்டு நிதியினை கட்டி முடிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் 09 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 74,000 க்கான அவ்வலுவலகத்திற்குரிய உப கட்டுநிதியினை 2 மாதம் முதல் 04 மாதம் வரையில் தாமதித்து கட்டி முடிக்கப்பட்டிருந்தது. | தாமததத்திற்கு காரணம் கொவிட் தொற்று நிலைமையினால் அதிகாரிகளை இடையிடையே விட்டு விட்டு கடமைக்கு அழைப்பதனால் அவர்களின் விசாரணை மற்றும் வழக்குகள் தொடர்பான ஆவணக் கோப்புக்கள் குவித்து வேலைப்பழு அதிகரித்ததினால் ஆகும். | நிதிப்பிரமாணம் 371(2) பிரகாரம் உப கட்டுநிதி கட்டி முடிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய இலக்கம் 2016/05 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1 பந்தி | (i) பொது 47 அறிக்கையின் கீழ் காட்டப்பட்டிருந்த பொருட்கள் தொடர்பான பொருட் கணிப்பில் பெற்றுக் கொடுக்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்று நிலைமை காரணமாக இந்நிலை ஏற்பட்டதுடன் தற்போதைக்கு பழுதடைந்த பொருட்கள் ஏலத்தில் விடப்பட்டு அப்புறப்படுத்தல் அலுவல்கள் முடிக்கப்பட்டுள்ளன. | அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் பிரகாரம் செயல்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii)2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வழக்கு பொருட்கள் தொடர்பாக கணிப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அதிகாரிகளை இடையிடையே கடமைக்கு அழைப்பதன் காரணமாக ஏற்பட்ட பணிப் பழுவினால் மேலதிக அலுவலுக்காக அதிகாரிகளை ஈடுபடுத்துவதற்கு இயலாமல் போயிற்று. | அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1 பந்தியின் பிரகாரம் செயல்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய இலக்கம் 01/2014 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வு ஆண்டிற்கான செயற்திட்டம் ஒன்றினை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானத்தின் மூலம் காட்டப்பட்டுள்ள படி எதிர்காலத்தில் வருடாந்த செயற்திட்டத்தினை சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களையும் உட்படுத்தி தயாரிக்கப்படும். | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மதிப்பீட்டு பெறுமானம் ரூபா 1,136,818 க்கான ஐந்து மாடிக் கட்டிடத்தின் தரைத் தளத்தின் மலசலகூட முறைமையினை நவீனமயப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தினை கட்டிடத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டில் கோவையின் 8.9.1(அ) பிரிவின் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கை யொன்றினை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. அதன் | இவ் ஆணைக்குழுவில் பொறியியல் அறிவுள்ள அதிகாரி ஒருவர் இல்லாமையினால் அதிகளவான நிர்மாணப் பணிகள் கட்டிட திணைக்களம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. அவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற மேற்கொள்ளப்பட்ட பணியினை அத்தாட்சிப்படுத்தல் | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1(அ) மற்றும் 1.2.1(அ) பிரிவின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| காரணமாக ஒப்பந்த கால எல்லையினை இனங்கண்டு கொள்ள முடியாதிருந்ததுடன் பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1(அ) பந்தியின் பிரகாரம் பெறுகை விதியின் அடிப்படை நோக்கத்தினை அடைய முடிந்ததா என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் முடியாது போயிற்று. | அடிப்படையில் கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. |

## 3.3 நட்டங்களும் இழப்புக்களும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 10 வருடங்களுக்கு மேலாக நடந்து வருகின்ற 2 சம்பவங்கள் தொடர்பாக ரூபா 34,954 க்கான நட்டம் தொடர்பாக தகுந்த நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு மீளாய்வு ஆண்டிலேயும் முடியாது போயிருந்தது. | இந்நட்டம் நீண்ட காலத்திற்கு முன் நேர்ந்த விபத்துக்களினால் ஏற்பட்ட நட்டங்களாகும். எதிர்காலத்தில் இது சம்பந்தமாகத் தேடிப்பார்த்து ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இது தொடர்பான உரிய நடவடிக்கை உடன் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) வழக்குத் தீர்ப்புக்கள் அளிக்கப்பட்டு பல வருடங்கள் சென்று போய் இருப்பினும் நில கோப்புக்களுடன் சம்பந்தப்பட்ட வழக்கு சார் பொருட்கள், வழக்குப் பொருட்கள் சார் அதிகாரி பொறுப்பில் இருந்தன. | வழக்குசார் பொருட்கள் நீதிமன்றப் பொறுப்பில் உள்ளபடியால் அவற்றினை ஆணைக்குழுவிற்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் நீக்குதல் குழுவொன்று நியமிக்கப்பட்டு அது மூலம் பெற்றுக் கொடுக்கப்படும் பரிந்துரைகளின் படி செயலாற்றல் பின் முற்பணத்தினை ஏட்டிலிருந்து தள்ளுபடி செய்வதற்கான | நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் வழக்குத் தீர்ப்பு கிடைக்கப் பெற்றதன் பின் அல்லது மேன்முறையீடு முடிந்ததன் பிறகு அக் கோப்புக்களுடன் தொடர்புடைய வழக்குச் சான்றாக பொருட்கள் அதிகாரியினது பொருள் |

| | | | |
|---|---|---|---|
| | | | மிகுதியினுள் காணப்படும் பொருட்களை ஏடுகளிலிருந்து நீக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2016 மார்ச் 01 திகதி நடந்த பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவை குழுவின் மூலம் இலக்கம் 36/69/சீ கொண்ட மலலசேகர மாவத்தையில் அமைந்துள்ள நிலத்தினை ஆணைக்குழுவிற்கு சுவீகரித்துக் கொடுப்பதற்கு 2016 வருடம் தீர்மானிக்கப்பட்டு இருந்த போதிலும் அதன் சட்டரீதியான உரிமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு 2020 திசெம்பர் இறுதி தினம் வரையிலும் முடியாது போய் இருந்தது. | தற்போதைக்கு இந்நிலத்தின் சட்டரீதியான உரிமை திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரிடம் இருப்பதுடன் இதனை ஆணைக்குழுவிற்கு சுவீகரித்துக் கொள்வதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் பிரதேச செயலாளரின் இணக்கப்பாடு கிடைத்ததன் ஆணைக்குழுவினால் சுவீகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிலத்தின் சட்டரீதியான உரிமையினை உறுதிப்படுத்து வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 க்கு உள்ளவாறான சிவில் பணிக் குழாமில் 425 வெற்றிடங்கள் மற்றும் விசாரணைப் பிரிவு பணிக்கு குழாமில் 44 வெற்றிடங்கள் காணப்பட்டன. | ஆணைக்குழுவில் நிலவும் இட நெருக்கடி காரணமாக புது ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கும் இல்லாது உள்ளது. ஆயினும், 2021.03.01 இல் ஊழல் நிவாரண உத்தியோகத்தர் 18 பேர் மற்றும் 2020.10.15 இல் சட்ட உதவி உத்தியோகத்தர் 11 பேரையும் 2021.02.25 இல் சட்ட உதவி உத்தியோகத்தர் 03 பேரையும் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விசாரணை பணிக்குழாமில் நிலவிய 44 வெற்றிடங்களுள் 42 இதுவரையிலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | அத்தியா வசியமான பதவிகளுக்கான வெற்றிடங்கள் முறையாக பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |